

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (28.1.2025) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை சிப்காட் வளாகத்தில் நடைபெற்ற பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி (Jamboree) மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பெருந்திரளணி விழாவை கொடியேற்றி தொடங்கி வைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். இவ்விழாவில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், எஸ்.எஸ். சிவசங்கர், அன்பில் மகேஸ் பொய்யாமொழி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வி. செ.ஜோதிமணி, துரை வைகோ, சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், எம்.பழனியாண்டி, ப.அப்துல் சமது, மரு.வை.முத்துராஜா, சமுகநலத்துறை செயலாளர் திருமதி.ஜெயஸ்ரீ முரளிதரன் பள்ளிக்கல்வித் துறை செயலாளர் திருமதி.எஸ்.மதுமதி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் தலைவர், அனில்குமார் ஜெயின், பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் தேசிய முதன்மை ஆணையர் கே.கே.கண்டேல்வால், (ஓய்வு), பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் மாநில முதன்மை ஆணையர் முனைவர்.க.அறிவொளி உள்பட அரசு அலுவலர்கள், சாரண, சாரணியர்கள் உடனிருந்தனர்.

# மணப்பாறையில் - சாரண சாரணியர் இயக்கத்தின் வைரவிழா! கலைஞர் நூற்றாண்டு பெருந்திரளணி விழா! அஞ்சல்தலை வெளியீடு!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டு விழாவை சிறப்பித்தார்! கர்நாடக மாநில துணை முதலமைச்சர் டி.கே.சிவக்குமார் பங்கேற்பு!

**மணப்பாறை, ஜன.30-**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி (Jamboree) மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பெருந்திரளணி விழாவை கொடியேற்றி தொடங்கி வைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்று, வைர விழா பெருந்திரளணி குறித்த அஞ்சல்தலை மற்றும் அஞ்சல் உறையை வெளியிட்டார்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை சிப்காட் வளாகத்தில் நேற்று முன்தினம் (28.1.2025) பாரத சாரண, சாரணியர் இயக்கத்தின் வைர விழா பெருந்திரளணி (Jamboree) மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பெருந்திரளணி விழாவை கொடியேற்றி தொடங்கி வைத்து, அணிவகுப்பு மரியாதையை ஏற்று, வைர விழா பெருந்திரளணி குறித்த அஞ்சல் தலை மற்றும் அஞ்சல் உறையை வெளியிட்டார். முன்னதாக முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டார்.

உலக அளவில் இளைஞர்களுக்கான சீருடை இயக்கமாக திகழும் சாரண, சாரணியர் இயக்கத்தின் Jamboree என்றழைக்கப்படும் பெருந்திரளணி ஒவ்வொரு நாட்டிலும் நான்காண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்பட்டு வருகின்றது. இந்தியாவில் தற்போது வரை 18 பெருந்திரளணிகளும், 5 சிறப்பு பெருந்திரளணிகளும் நடைபெற்றுள்ளன. தமிழ்நாடு பாரத சாரண, சாரணியர் இயக்கம் சார்பாக 2000 ம் ஆண்டில் மாண்பு மிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையில் சென்னை துரைப்பாக்கத்தில் சாரண, சாரணியர் இயக்க பொன்விழா பெருந்திரளணி நடைபெற்றது.

இந்தியாவில் 7.11.1950 அன்று பாரத சாரண, சாரணிய அமைப்பு உருவாக்கப்பட்டு, தற்போது 75 ஆண்டுகள் நிறைவு பெற்றுள்ளது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை சிப்காட் வளாகத்தில் 28.1.2025 முதல் 3.2.2025 வரை நடைபெறுகிற பாரத சாரண, சாரணியர் இயக்க வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பெருந்திரளணிக்காக பெருந்திரளணி சபை, திட்டக்குழு, தொழில்நுட்பக்குழு, செயல்பாட்டுக்குழுக்கள் மற்றும் 33 துணைக்குழுக்கள் அமைக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பாரத சாரண, சாரணியர் இயக்க வைரவிழாவில் தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளைச் சார்ந்த 20 ஆயிரம் சாரண, சாரணியர்கள் கலந்து கொண்டு தங்கள் கலாச்சாரம், பண்பாடு குறித்த செயல்பாடுகளை நிகழ்த்திக் காட்ட உள்ளனர். இந்நிகழ்ச்சிக்காக சாரணர்கள் தங்குவதற்காக 1000 கூடாரங்கள், சாரணியர்கள் தங்குவதற்காக 900 கூடாரங்கள், திரிசாரண சாரணியர்கள் தங்குவதற்காக 450 கூடாரங்கள், ஒன்றிய மற்றும் மாநில அரசு அலுவலர்கள் தங்குவதற்காக 40 கூடாரங்கள், அலுவலகப்பணிக்காக 32 கூடாரங்கள் என மொத்தம் 2,422க்கும் மேற்பட்ட கூடாரங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் பங்கேற்கும் சாரண, சாரணியர்கள் அனைவருக்கும் உணவு, குடிநீர், கழிப்பறை உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அனைத்தும் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பிற்காக 350க்கும் மேற்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

நிகழ்ச்சி நடைபெறும் மணப்பாறை சிப்காட் வளாகத்தில் மருத்துவ சேவை வழங்கிடும் வகையில் 25 படுக்கை வசதிகளுடன் கூடிய மருத்துவ கூடாரங்கள் மற்றும் 15 நடமாடும் மருத்துவ வாகனங்கள், அவசர உதவிக்காக 15க்கும் மேற்பட்ட அவசர சேவை ஊர்திகளும், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையின் சார்பில் முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இவ்விழாவில் கர்நாடக மாநில துணை முதலமைச்சர் டி.கே.சிவக்குமார், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கர்நாடக சட்டமன்ற பேரவைத் தலைவர் யூ.டி. காதர் ஃபரீத், நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வி. செ.ஜோதிமணி, துரை வைகோ, சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், எம்.பழனியாண்டி, ப.அப்துல் சமது, மரு.வை.முத்துராஜா, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், துணை மேயர் திருமதி.திவ்யா, சமுகநலத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், பள்ளிக்கல்வித் துறை செயலாளர் திருமதி.எஸ்.மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர் மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் தலைவர், திரு. அனில்குமார் ஜெயின், பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் தேசிய முதன்மை ஆணையர் கே.கே.கண்டேல்வால், பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் மாநில முதன்மை ஆணையர்முனைவர்.க.அறிவொளி உள்பட அரசு அலுவலர்கள், சாரண, சாரணியர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (28.1.2025) திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை சிப்காட் வளாகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி அமைக்கப்பட்ட புகைப்படக் கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டார். இவ்விழாவில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் துரை வைகோ, செல்வி. செ.ஜோதிமணி, சட்டமன்ற உறுப்பினர்கள் அ.சௌந்தரபாண்டியன், எம்.பழனியாண்டி, ப.அப்துல் சமது, மரு.வை.முத்துராஜா, சமூகநலத்துறை செயலாளர் திருமதி.ஜெயஸ்ரீ முரளிதான் பள்ளிக்கல்வித் துறை செயலாளர் திருமதி சோ.மதுமதி தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் தலைவர் அனில்குமார் ஜெயின், பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் தேசிய முதன்மை ஆணையர் கே.கே.கண்டேல்வால், (ஓய்வு, பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் மாநில முதன்மை ஆணையர் முனைவர்.க.அறிவொளி மற்றும் அரசு அலுவலர்கள், சாரண, சாரணியர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில்

# கரூர் - கிருஷ்ணராயபுரம் வட்டத்தில் பெட்ரோல் - டீசல் விற்பனை நிலையம்!

## அமைச்சர்கள் அர.சக்கரபாணி – வி.செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தனர்!

*கரூர், ஜன.30-*

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் ரூ.1.14 கோடி மதிப்பீட்டிலான 16 KL பெட்ரோல் மற்றும் 22 KL டீசல் கொள்ளளவு கொண்ட பெட்ரோல் - டீசல் விற்பனை நிலையத்தினை உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஆகியோர் திறந்து வைத்து விற்பனையினைத் தொடங்கி வைத்தார்கள்.

1972-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் விவசாயிகளின் கடின உழைப்பினால் உற்பத்தி செய்யப்படும் நெல் மணிகளைக் கொள்முதல் செய்து அரவை ஆலைகள் மூலம் அரிசியாக்கி, பொது விநியோகத் திட்டத்திற்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைக் கொள்முதல் செய்து கிடங்குகளில் இருப்பு வைத்து, நியாய விலை அங்காடிகளுக்கு நகர்வு செய்து தமிழ்நாட்டு மக்களின் பசியாற்றி வரும் உன்னதப் பணியினை மேற்கொண்டு வருவதுடன், தரமான பொருள் நியாயமான விலை என்ற கோட்பாட்டுடன் அமுதம் மக்கள் அங்காடிகள் மூலம் பொதுமக்களின் குடும்பங்களுக்குத் தேவையான பொருட்களை விற்பனை செய்து வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து, உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மூலம் தமிழ்நாடு முழுவதும் 17,44,892 புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு 2600 நியாய விலைக்கடைகள் புதியதாக திறக்கப்பட்டுள்ளது. மேலும் தேவைப்படும் இடங்களில் பகுதி நேர நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டு, நகரங்களில் 1000 குடும்ப அட்டைகள் மற்றும் கிராமப்புறங்களில் 800 குடும்ப அட்டைகளுக்கு மிகாமல் நியாய விலைக் கடைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும் உழவர் பெருமக்கள் மற்றும் பொதுமக்கள் உபயோகப்படுத்தும் போக்குவரத்து வாகனங்கள் மற்றும் வேளாண்மைக்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கான பெட்ரோல் மற்றும் டீசல் போன்ற எரிபொருட்களை நல்ல தரத்துடனும், சரியான அளவிலும் விற்பனை செய்திடும் வகையில் நேற்று முன்தினம் (28.01.2025) கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், சிவாயம் வடக்கு கிராமத்தில் அமைந்துள்ள கிருஷ்ணராய புரம் வட்ட செயல்முறைக் கிடங்கு வளாகத்தில் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிட்., நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன் ரூ.1.14 கோடி மதிப்பீட்டில் 16 கிலோ லிட்டர் பெட்ரோல் மற்றும் 22 கிலோ லிட்டர் டீசல் கொள்ளளவு கொண்ட 1214.78 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டிமுடிக்கப்பட்ட எரிபொருள் விற்பனை நிலையம், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களால் திறந்து வைக்கப்பட்டு, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜியால் விற்பனை தொடங்கி வைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டது.

இந்த பெட்ரோல்-டீசல் விற்பனை நிலையத்தில், வாடிக்கையாளர்கள் எளிதாக பணம் செலுத்துவதற்கு ஏதுவாக மின்னணு பணப்பரிமாற்றம் வசதிகள் (GPAY, Phonepay, Paytm etc.,) செய்யப்பட்டுள்ளதுடன், வாடிக்கையாளர்கள் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பிற்காகவும் விற்பனை வளாகம் முழுவதும் கண்காணிப்புக் கருவி (CCTV Camera) பொருத்தப்பட்டுள்ளது. மேலும் தனியார் எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு இணையாக நைட்ரஜன் (N2) இணைப்புடன் கூடிய காற்று நிரப்பும் இயந்திரம் பொருத்தப்பட்டு வாடிக்கையாளர்களின் வாகனங்களின் சக்கரங்களுக்கு விலையில்லாமல் காற்று நிரப்புவதுடன், பொதுமக்களின் தாகத்தினைத் தீர்த்திடும் வகையில் குளிரூட்டப்பட்ட குடிநீர் வசதியும், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிப்பறை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும் தமிழ்நாடு முழுவதும் இம்மாதிரியான எரிபொருள் விற்பனை நிலையங்கள் தேவைக்கேற்ப திறந்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்விழாவில் குளித்தலை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆர்.இளங்கோ, கிருஷ்ணராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி க.சிவகாமசுந்தரி, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிருவாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் த.மோகன், கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் சேலம் முதன்மை மண்டல மேலாளர் அய்யப்ப தாஸ், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.




நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. வார்டு செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் பாகநிலை முகவர்கள்(பி.எல்.ஏ.2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி.) கலந்தாய்வு கூட்டம் நாகையில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பேசினார். உடன் மாநில விவசாய அணி இணைச் செயலாளரும், தொகுதி பார்வையாளருமான ஆர்.அருள்செல்வம், மாவட்டக் கழக அவைத்தலைவர் மு.லோகநாதன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து, சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் இரா.முருகையன், பி.என்.கார்த்தி, எம்.தினேஷ்குமார், எஸ்.பால்ராஜ், நகரக் கழக நிர்வாகிகள் வெற்றிலை கடைசிவா, அபுபக்கர் மற்றும் பலர் உள்ளனர்.



கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், சிவாயம் வடக்கு கிராமத்தில் அமைந்துள்ள கிருஷ்ணராயபுரம் வட்ட செயல்முறைக் கிடங்கு வளாகத்தில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் ரூ.1.14 கோடி மதிப்பீட்டிலான பெட்ரோல்டீசல் விற்பனை நிலையத்தினை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி ஆகியோர் திறந்து வைத்து விற்பனையினைத் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் கூட்டுறவு. உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ. ராதாகிருஷ்ணன், உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை இயக்குநர் த.மோகன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக நிர்வாக இயக்குநர் ஆ.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித் தலைவர் மீ.தங்கவேல், சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம் (குளித்தலை). ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), திருமதி க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.